முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 958

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.05.2022, சனிக்கிழமை

1. பாருலகம் காக்க வந்த ஞானியே
பரமானந்த சதாசிவ சற்குருவே
ஆறுமுகன் என் அவதாரமே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்

2. அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 31 ம் நாள் 14.05.2022, சனிக்கிழமை)
ஆக்கம் தந்து உலகமக்களை மீட்க
ஆறுமுகன்என் சக்தியாகவே வடிவெடுத்துவந்த
அரங்கனே உந்தனுக்கு முருகப்பெருமான் யானும்
உயர்வான சூட்சும மகா சக்தியாக
சிந்தை கலந்து செயல்கள் அனைத்திலும்
சித்தி அருளி ஆறுமுகன் யான் அருளிவர

3. அருளுகின்ற அரங்கன் உன் உபதேசங்கள் அனைத்தும்
ஆறுமுகன் என் உபதேசமாக
வரமென நீ தருகின்ற அமுது (உணவு) அனைத்தும்
*(ஓங்காரக்குடிலில் அன்பர்களுக்கு வழங்கப்படும் உணவு)*
வையகத்தார் பசி பிணி சர்வ ரோகங்களும் விரட்டும் அருமருந்தாகும்

4. ஆகவே அரங்கன் செய்யும் செயல்கள் அனைத்தும்
ஆறுமுகன் யான் செய்யும் செயல்களாகும்
வரமென உலகோர் ஏற்றுவிட்டால்
வையகத்தையே மாற்ற முடியுமப்பா

5. அப்பனே இந்த மாற்றத்தை
அழியாமை தந்து இந்த கலியில் செய்து முடிப்பேன் என
அரங்கன் நீ உறுதிகொண்டு வந்துள்ளதாலே
ஆதலால் உன் செயல் அனைத்துக்கும்

6. உலகிலுள்ள அனைத்து மகா சக்திகளும்
வானவர் தேவர்கள் வையகத்தை
காக்க வந்த அஷ்டதிக்பாலகர்கள்
மகாசக்திகள் அனைத்தும் பெருந்துணையாய் நிற்க
7. நிற்கவே நின்தடம் நிலவுலகைக் காக்கும்
தனித்துவமிக்க ஞான பீடமாகும்
ஆகவே உன் தடத்தின் தொடர்பு கொண்ட மக்களெல்லாம்
உலகினில் இனி பிறவாத பெரும்பேற்றுக்குண்டான
(பெருமைக்கு உண்டான) பெருந்தன்மை கூடி
8. கூடியே இந்த கலியுகத்தின் தீவினைகளை விரட்டி
உந்தன் வழி காக்கும் சக்திமிகு ஞானிகளாக மாறும் ஆற்றலும் பெறுவர்
அற்புதத்தை ஆறுமுகன் யான் உன் வழி
இந்த கலியினில் நடத்துவேன் ஞான அறிவுரை ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

ஓங்காரக்குடிலாசான் தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் உலகத்தையும் உலக மக்களையும் காப்பதற்காக அவதரித்த அவதார புருஷர் ஆவார். மகான் முருகப்பெருமானால் இந்த உலகை காக்க அனுப்பப்பட்டவர்தான் ஓங்காரக்குடிலாசான்.

ஓங்காரக்குடிலாசானின் உடலில் சூட்சுமமாக இருந்து, ஓங்காரக்குடிலாசானின் சிந்தை, சொல், செயல் அனைத்தையும் தன் வசமாக்கி அருளுகின்றார் மகான் முருகப்பெருமான். ஓங்காரக்குடிலாசானின் உபதேசங்கள் அனைத்தும் தன்னுடைய உபதேசங்களாக மக்களுக்கு சென்று அடைகின்றது என்பதை மகான் முருகப்பெருமான் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். ஓங்காரக்குடிலில் சமைக்கப்பட்டு அன்பர்களுக்கு வழங்கப்படும் அமுது (உணவு) சர்வநோய்களையும், பசி எனும் பிணியையும் தீர்க்கும் அருமையான மருந்து என்று அருளியுள்ளார் முருகப்பெருமான். ஓங்காரக்குடிலாசானின் செயல்கள் அனைத்தும் முருகப்பெருமானின் செயல்களேயாகும், கடுந்தவம் புரிந்து இந்த உலகத்தை காப்பதற்காக உறுதி பூண்டு இப்பிறவியில் ஓங்காரக்குடிலாசான் எழுந்தருளி இருக்கும் ஓங்காரக்குடில் உலக நன்மைக்காக முருகப்பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட புண்ணிய பூமியாகும். மகான் முருகப்பெருமான், மகான் அகத்தீசர் முதல் நவகோடி சித்தர்களும், தேவர்களும், எட்டு திசையில் பள்ளி கொண்டுள்ள அட்டத்திக்கு பாலகர்களும், உலகிலுள்ள அனைத்து ஞானசக்திகளும் சூழ்ந்து அருள்புரிகின்ற அருள் பூமி ஓங்காரக்குடிலாகும்.

உலகத்தையும் உலக மக்களையும் காப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்ட ஓங்காரக்குடிலுக்கு வந்து ஓங்காரக்குடிலாசானை தரிசித்து இங்கு வழங்கப்படும் உணவினை உண்டு செல்லும்

மக்களுக்கு மிகவும் பெருமைக்கு உண்டான பேரின்ப வாழ்வை அடைவதற்கான வழி பிறக்கும் என்பது மகான் முருகப்பெருமானின் சத்திய வாக்காகும்.

**- உலக நன்மைக்காக முருகப்பெருமான் அமைத்தார்**
**துறையூர் ஓங்காரக்குடிலை.**

**- உலக நன்மைக்காகவே முருகப்பெருமான் படைத்தார்**
**ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிகரை.**

உலக மக்கள் இதுநாள் வரை எதிர்பார்த்து காத்திருக்கும், முருகப்பெருமான் தலைமையிலான ஞானிகளின் ஞானஆட்சி அமையும் காலம் கனிந்துள்ளது. இனி உலகத்தில் முருகப்பெருமானின் தலைமையில் ஞானிகள் ஆட்சி நடைபெறும் என்பது முருகப்பெருமானின் அருள் வாக்காகும். இந்த வாக்கிற்கு சாட்சியாக மகான் பரத்துவாசர் இன்று **(14.05.2022)** அருளியுள்ள நூலில்,

**10.** ஆசியும் மனித சக்தியை
அழியாமை எனும் வழிகாட்டி
ஆசியினால் ஞானி ஆக்கும்
ஆறுமுகன் தலைமை வருகின்ற

**11.** வருகின்ற ஞான ஆட்சிக்கு
வல்லமைபட வழிவகையாக
குருவரங்கன் சேவை துணைவரும்
குறையிலா ஞான ஆட்சி மலரும்

என உறுதிபட அருளியுள்ளார்கள். மகான் பரத்துவாசர் இகவாழ்வாகிய இவ்வுலகத்திலும், பரவாழ்வாகிய ஞானஉலகத்திலும் இருந்து அருள் செய்யும் மகா ஞானியாவார்.

ஆற்றலாம் வேலவன் அருளினை போற்றிட
ஏற்றமே வாழ்வில் இன்பம் உண்டாம்.

நற்றவ வேலனை நாளும் போற்றிட
பற்றற்ற வாழ்வும் பரகதியும் கூடுமே.

காலனை வெல்ல கடுந்தவம் வேண்டுமோ?
வேலனைப் போற்றிட வெற்றியும் உண்டாம்.

எந்தை வேலவன் இணையடி போற்றிட
சிந்தையும் தெளிய சிவமது ஆவாரே.

அற்புத வேலவன் அருளினைப் போற்றிட
கற்பக விருட்சம் கைவசமாகுமே.

அதிமதுர அருணகிரி அருளினைப் போற்றிட

விதியை வென்றிட விவேகம் உண்டாம்.

அம்மை வள்ளலார் அருளினைப் போற்றிட

நம்மையும் காத்துமே நாட்டையும் ஆள்வாரே.

மணிவாசகப் பெருமானின் மலரடி போற்றிட

அணிமா சித்தும் அருள்வார் நலமே.

எந்தை சம்பந்தன் இணையடி போற்றிட

சிந்தை மகிழ சிவபதம் ஆவாரே.

அப்பப்பா நந்தனார் அருளினைப் போற்றிட

தப்பாமல் சிவபதம் சார்வாரே.

திருமூலர் திருவடியை தினமும் போற்றிட

கருமூலங் கடக்க காட்டுவார் நலமே.

நாட்டமாம் வேலனை நாளும் போற்றிட

வாட்டமும் இல்லை மனமும் செம்மையே.

ஓராறும் ஆறும் ஓதிய புகழுரை

ஈராறுமாக இயம்பினார் ஈசனே.